# KADAMBARI IN TAMIL

Gl. 56156
2002

BY

ADIVARAHA KAVI

EDITED BY

PANDIT P. R. KRISHNAMACHARIAR.

TANJORE:
G. S. MANIYA & Co
1908.

(Copyright.)

# முகவுரை.

காதம்பரி, ஒரு வட நூல்; பாணன் என்னும் மகாகவியால் இயற்றப்பட்டது; சிறந்த வசன காவ்யம். "காதம்பரீ ரஸஜ்ஞாநா மாஹாரோபி நரோசதே" என்று பண்டையோர் இதனைப் பெரிதுஞ் சிறப்பித்துப் பாராட்டிக் கூறியிருத்தல் காண்க. காதம்பரியின் சுவையை யறிந்தவர்களுக்கு ஆகாரங்கூட இனியாது என்பது இதன் பொருள். கல்வியிற் பெரியராகிய கம்பரது பாடல்களில் இக்காதம்பரியின் கருத்துக்களும் அழகான கற்பனைகளும் ஆங்காங்குக் காணப்படுதலாலும் இந்நூற்சிறப்பு விளங்கும். இவ்வரிய பெரிய நூலைத் தமிழுலகமுங் கற்றுக் களிக்க வேண்டுமென்னுங் கருணையினால் கதைத்தொடர் இனிது விளங்குமாறு அவசியமான விஷயங்களையும் கற்பனைகளையுந் தழுவிச் சுருக்கமாக 1314-தமிழ்ப்பாவினங்களால் மொழிபெயர்த்துதவிய மகோபகாரி ஆதிவராககவி என்னப்படுவார். இவர் சோழநாட்டிலே அந்தணர் மரபிலே பாரத்துவாச கோத்திரத்திலே அருளாளர் என்பவருக்குத் திருமகனாராக உதித்தவரென்றும், விஷ்ணுபத்தியிற் சிறந்தவரென்றும் பாண்டிநாட்டிலே சுந்தரபுரியிலே வாழ்ந்துவந்த தேவர் நாயகன் என்னும் ஒரு வைசியகுலப்பிரபு சிகாமணியால் சன்மானிக்கப்பெற்று அவனது வேண்டுகோளால் இந்நூலை இற்றைக்கு 490-வருஷங்கட்கு முன்னர் இயற்றியுபகரித்தாரென்றும் இந்நூற் பாயிரத்தால் இனிது விளங்குகின்றது.

P. R. K.

ஸ்ரீ

# கடவுள் வணக்கம்.

## திருமால்.

பொன்கொண்ட நேமிப் புயல்பூமகள் புல்லி வாழு
மின்கொண்ட மார்ப னெழுபார்சதுர் வேத னோடு
முன்கண்ட நாபி முதன்மூவகை மூர்த்தி யான
வென்கண்ட கோமா னிருபாத மிறைஞ்ச லுற்றேன்.

## சிவபிரான்.

சொல்லும் பொருளுங் கனியுஞ் சுவையுங் கூடரு
மெல்லுஞ் சசியு நிசியு மியலு மிசையு
மொல்லும் முடலு முயிரும்மெனநாளு மொன்றிச்
செல்லும் பரசத்தி சிவநாதனைச் சிந்தை செய்வாம்.

## கலைமகள்.

மன்றன் முகநறுவி லிருந்து மொழிந்த வேத
தன்னூ லுலகந் தழைப்பித்த தையை றுய்ய
நன்றுமெனநாளு நவின்று நவின்று வாழு
மென்று வழுத்தாக மெனக்கரி தாய துண்டோ.

## விநாயகக்கடவுள்.

செங்கோல மேனிச் சிவனார் திரு மைந்த னெங்கோன்
பங்கோன் முராரி மருகன் நடம் பார்க்கு முன்னோன்
வெங்கோப வேழ முகவன்வினை வேர றுக்கு
மெங்கோ னடிசேர் பவரிந்திர னென்ன வாழ்வார்.

## முருகக்கடவுள்.

பஞ்சண்ட கோல மயிலுண் டயில்வேலு முண்டு
அஞ்சண் டினிநான் மறலிக்குயிர் தோற்ப துண்டோ
நஞ்சுண்ட நாதர் மகனார் திரு நாம முண்டு
நெஞ்சுண்டு பாட நினைவுண்டதி னேய முண்டே.

# கா து ம ப ॥•

[மகா சுவேதை தன்வரலாறு கூறியது.]

1 சீருடைநின் றிருவவதா ரத்தினுற் றெய்வசணத்
தியாருடைய திருமரபோ வீடேற விட்டதுதான்
பேரழகு தருமிந்தப் பிராயத்தே மனமொடுங்கிச்
சாரல்வனந் தனிற்றனியே தவஞ்செய்யக் காரியமேன்.

2 என்றளவி லவடானு மிருந்தொன்றை நினைந்துளமேற்
சென்றதுயர் மீதூரச் செயலழிந்தொன் றொன்றாக
நின்றுவிழுந் தாளமென நீணெடுங்கண் ணெளிசோர
வன்றணிகூர்ந் தறவிம்மி வாய்விடா திருந்தழுதாள்.

3 அப்படியே யழுமளவி லண்ணலும்பார்த் தருந்துயர்தா
னிப்படியே தெளிந்தோர்க்கு மெய்துமா றிருந்ததெனப்
பொய்ப்படியே நெடுநாளாய்ப் போனதைநா னினைப்பித்தேன்
றப்பிதுவே போதுமெனத் தன்னையே தானொந்து.

4 போயருவி நீர்கொணர்ந்து போற்றிமனந் தேற்றியபின்
ஆயிழையு முகங்கழுவி யணிந்தமர வுரிக்கலையாற்
சேயநய னந்துடைத்துத் தீயெழவே நெடிதுயிர்த்துத்
தூயவனை முகநோக்கிச் சொல்லுவன்கே ளெனவுரைப்பாள்.

5 அறப்பாவி யாயருளொன் றற்றவளாய் முற்றியவென்
பிறப்பாலென் பயனேது பெருந்தவத்தாற் பயனேது
குறித்தாலுங் கூறரிது கூறினுங்கேட் கரிதுமனம்
பொறுத்தாலும் பொறுக்கரிது பொறுக்கரிதா யினுங்கேண்மின்.

வே று.

6 அண்ட ருலகி லரம்பையரென் றவனி புகழுஞ் சிலமாத
ருண்டு தலைநா ளவர்குலந்தா னுயர்வே தத்து மயனுளத்தும்
பண்டு கடைந்த வமுதத்தும் படிநீ ரெரிகா லெனுமிவற்றுஞ்
சண்ட கிரண மிமகிரணந் தனிலு மதவே டன்னிடத்தும்.

7 தரும னிடத்து மிளனிடத்துந் தக்கன் மகளிர் தங்களிலே
யிருவர் முனிவர் வருட்டையுமென் றிவர்க ளிடத்து மெனவிந்த
வரிய பதினு லிடத்துதித்த தநனுே டிந்த வரிவையர்பான்
மருவி யிரண்டு கந்தருவ மரபு மூதித்த வவைதம்மில்.

8 சிறந்த முனிபா லுயர்சித்ர சேனன் முதலா மீரெண்மர்
பிறந்து வளர்ந்தா ரவர்க்கெல்லாம் பின்னு பிறிவான் முன்னுகி
நிறைந்த சித்ர ரதனென்போ னீதி நெறியான் மிகவிளங்கி
யிறைஞ்சு மகவான் றோழனுமா யிந்த மரபிற் றிறையானுன்.

# காதம்பரி.

9 இவன்றா னிப்பா ரதவருடத் தெல்லை முடிந்த வத்திசையி
லவந்தா னில்லாக் கிம்புருட வருட மதனுக் கணிவரையா
நவஞ்சே ரேமகூடத்தை நகரி யாக்கி யதிலிருந்தான்
றவஞ்சேர் குணத்தோ யந்தவரை தானு மிஙனே சற்றிடமே.

10 இவன்செய் ததுவே சயித்ரரத மென்னு மிந்த மலர்க்காவு
மிவன்செய் ததுவே யச்சோத மென்னு மிந்தப் பூந்தடமு
மிவன்செய் ததுவே யிக்கோயி றானு மிருந்தோன் வலியாலே
யிவன்செய் ததுவே செயலெங்க ளெழிற்காந் தருவப் புவிக்கெல்லாம்.

11 இனிமற் றந்த வருட்டைதரு மெழுவோ ரிற்றும் புருமுதலா
முனிவற் றுயர்ந்தோ ரறுவர்க்கு மூத்தோ னன்னப் பெயரோனை
வனைபொற் கழலான் சித்ரரதன் மகுடஞ் சூட்டி வைத்தரசு
மனுசத் திறமும் பகுந்தளித்தா னவன்வாழ் பதியு மப்பதியே.

12 அந்த வமுத மதிக்கதிரி லமைந்த மரபி லவ்வமுதாற்
றந்த தெனவே யதிதவளந் தருபே ரழகு தன்னுடனே
வந்து பிறந்தாள் கௌரியெனு மடந்தை யொருத்தி யவடன்னைச
சிந்தை களிகூர்ந் தஞ்சன்முதற் றேவி யாகச் சீகரித்தான்.

13 அஞ்சன் றானுங் கௌரியே யெனும்பூந் திருவு மெப்போது
மிஞ்சுங் காதன் மீதூர விற்போர் வேளு மிரதியும்போ
னெஞ்சந் தானு முயிருமொரு நீர்மை யாகி நெடுங்காலம்
வஞ்சந் தானென் றறியாமல் வாழ்ந்தார் வாழு மந்நாளில்.

14 அவ்வா றமைந்த பெரியோருக் கரிய மகவா யவதரித்தே
னிவ்வா றமையாத் துயர்க்கெல்லா மிலக்காம் பாவி யொருத்தியையே
மெய்வா சகனு மென்றந்தை மிகவே களிகூர்ந் தென்னுடைய
துய்வா ளொளியா லெனக்குமகச் சுவேதை யெனவே பேரிட்டான்.

15 ஆண்பெற் றவர்போ லென்னையவ னறவே மகிழ்ந்து பாராட்டப்
பாண்பெற் றினிய யாழ்போலப் பயில்காந் தருவர் மடிகளிலுந்
தூண்பெற் றனைய தோள்களிலுந் தொடைமார் பிலுமே விளையாடி
நாண்பெற் றறியா மிகுபேதை நன்னாள் கடந்தேன் பின்னாக.

## வேறு.

16 தளிரிடையே மலர்தோன்றி மலரிடையே தேன்றோன்றித் தயங்கு தேனி
லளிதருகா ரளிதோன்றி யதனிடையே மதந்தோன்றி யதிலே யெல்லாம்
வெளியிடமோ மதன்றோன்றி யிப்படியே மெல்லவந்த வசந்த காலந்
தெளிவதுபோலென்னிடையேதிகழ்ந்ததுவந்தெழிலிளமைச்செவ்விக்கோலம்.

17 மயிலாடக் குயில்கூவ வண்டினங்க ளிசைபாட மதன பூசை
செயுமாதர் துழனிமிகப் பெருகியெழப் பரிமளமென் றென்றல் வீசப்
பயில்வாச மலர்த்தூளி பரந்துமணற் குவைகாட்டப் பதுமக் காடு
வெயில்காலும் படிமலர விருள்காலும் படிமலர விரையார் நீலம்.

18 வரிவளைவா யமுதான மகிழ்புளகஞ் செய்ததுபோன் மலர்ந்து வாழ
வரிபொருநா புரவொலியா லடிமலரா லசோகமெலா மசோக மாகக்
குரவமெலா முகிழ்முலையாற் குழைந்திளக மற்றுமெலாங் குளிர வார்க்குங்
கரைதெரியா வானந்த காரணமாய் வரும்வசந்த காலத் தோர்நாள்.

19 இந்தமலர் வாவியினீ ராடுவதற் கென்னனைவரி யானுங் கூட
வந்துகரை யருகொளிரும் பாறைகளின் மலைமகடன் வளைக்கை யாலே
சுந்தரமாம் வகையெழுதித் தொழுதவரன் றிருவடியைத் தொழுது நின்றுஞ்
சந்தனமென் சோலைகளுந் தழைத்தகொடி மண்டபங்க டானும் பார்த்தும்.

20 ஆர்த்துவருந் தெய்வதைகள் விளையாடுங் கொடியூச லணியும் பாரைப்
போர்த்தமலர்த் தூளியிலே தாளழுந்தி யோதிமங்கள் போக மாட்டா
வாய்த்ததருச் சூழல்களு மற்றுமுள்ள புதுமைகளு மகிழ்ந்து பார்த்துஞ்
சேர்த்தவுயிர்ப் பாங்கியரு மொருவேனும் விளையாடிச் செல்லும் போதில்.

21 அற்புதமாய் மனோகரமாய்த் திவ்வியமா யுலகோர்கண் டறியா வொன்று
மெற்பயில்காரளிமுழுதுமொன் றினையொன் றறமுந்தியெதிர்கொண்டோடப்
பற்பலவா மவ்வனப்பூம் பரிமளங்கள் யாவையுங்கீழ்ப் படுத்தி மேலாய்
வெற்பரசா மிவ்வானிற் காலுடன்வந் தொருவாசம் வீசிற் றன்றே.

22 அந்தநறும் பரிமளத்தான் முகுளிதமாம் விழியுடனீ தறிவே மென்னுச்
சிந்தைமகிழ்ந் ததனெதிரே சிறிதிடஞ்சென் றளவிலான் றிருக்கண் ணாலே
வெந்தமத வேளளவில் சோகத்தான் மெய்த்தவத்தை மிகமேற் கொண்டு
வந்தவசந் தனைப்போன்று மீசனருள் பெறத்தவஞ்செய் மாரன் போன்றும்.

23 தன்னொளியா லெங்கிலமுந் தனிக்கனக மயமாக்கித் தழைந்து வீழ்ந்த
செந்நிறவே ணியுமகன்ற திருநுதலும் புண்டரமுஞ் சிலையே யன்ன
மைந்நிறவார் புருவமுநீண் டகன்றனவெண் டாமரைபோன் மலர்ந்த கண்ணு
முன்னதமாய் நீண்டுவளர்ந் தொளிர்மூக்குஞ் செவ்வாயு மோங்கு தோளும்.

24 இருதோளில் வீழ்ந்தலைந்த குழையுமறை யுச்சரிப்பா விலங்கித் தோன்றுந்
தரமேவு வெண்ணகையு மழகுபொழி திருமுகமுந் தரித்த மானி
னுரிமேவு மணிமார்பும் புரிநூலு மொருகையிற் பலாசத் தண்டும்
வரமேவு பவித்திரமும் படிகமணி கமண்டலமு மற்றும் யாவும்.

25 கட்டினமுஞ் சியுமுடுத்த வற்கலையு ஞானத்தாற் கரிய மோக
மெட்டனையு முண்ணிலா தேகுவபோ லெழுரோம ராசி தானும்
வெட்டனவே யுச்சரித்த வேதமுமாய்த் தருமத்தின் வேடம் போன்றுந்
தட்டனுகா துயர்பிரம சாரியத்தி னலங்காரந் தன்னைப் போன்றும்.

26 தன்பருவ மனையானோர் முனிகுமரன் றிருப்பள்ளித் தாம மேந்திப்
பின்வரவு முன்பாகி நீராடல் காரணமாய்ப் பிறங்கு வாவிக்
கன்புடனே வருமவனோர் முனிகுமா ரனைக்கண்டே னளிகள் கோடி
யின்புறவே முரலுவதோர் பூங்கொத்து மவன்செவிமீ திலங்கக் கண்டேன்.

27 கண்டளவே யிந்தமலர்ப் பரிமளமே யந்தகறுங் கந்த மென்று
கொண்டிவனோர் மதனையயன் கோலறான் வடிவாகிக் குறும்பு செய்யு
மண்டர்களு முனிவர்களுஞ் சங்கியா வகைவிடுத்தா னாக வேண்டு
மண்டலமா மதிபடைத்தா னிவன்வதனம் படைப்பதுகை வரவென் றாகும்.

28 எழின்மதியி னமுதக்கலை யிரவிகவர் கின்றனனென் பதுதான் பொய்யே
முழுதுமவை யிம்முனியே கவர்கின்றா னல்லாது முளிவெங் கானிற்
றழுவியற வுலர்ந்துலர்ந்து தவஞ்செய்வார்க் கிவ்வழகு தானுண் டாமே
பழுதுபடா வழகிதற்குக் காரணம்வே றில்லையெனப் பார்த்தே னாக.

29 அடைவுமடை வல்லாது நினையாம லழகினையே யடைவாக் கொள்ளுங்
கொடியமதன் புதிதான குருமலர்த்தே னிளையதொரு கோல வண்டுப்
பெடையைவச மழிப்பதுபோ லெனையழித்தா னப்போது பேதை யேனும்
வடுவதுநங் குலமகளிர்க் கெனவறிந்து மனமடக்க வலிபொறாமல்.

30 ஒருசிறிது மிமையாதே சிறிதுகுவிந் தொருபுறத்தே சாய்ந்து வாய்ந்த
வரிபரவிப் புடைபெயர்ந்த கண்ணாலே யவனழகா மமுதை வாரிப்
பருகுவது போன்றுமெனைப் பரிகரித்துக் கொள்ளென்னும் பரிசே போன்று
மருளினியென் னெஞ்சுனக்கே யளித்தனனென் பதுபோன்று மநனே நோக்கி.

31 நேராக வெனைமறந்து மூச்சடங்கி யோவியம்போ னெடிது நேரம்
பேராம லசையாம னின்றேனப் பொழுதுமதன் பின்னே நின்று
சீராடி யெனைத்தள்ளிக் கொண்டுசென்று விடுத்தனனோ சிந்தை யாசை
யாராம விழுத்துக்கொண் டெய்தியதோ வறியேனா னருகே யானேன்.

32 நெஞ்சிலே யவன்வாழ விடங்கொடுக்கு மதுபோல நெடிது மூச்சு
விஞ்சியே மேன்மேலே தொடர்ந்தெழுந்த திதயத்தின் விருப்பை யெல்லாம்
வஞ்சியா துரைப்பதுபோல் விம்மியசைந் தனகொங்கை வழியும் வேர்வா
லெஞ்சியே கழுவுண்டு போனதுபோ லேபோன தெஞ்சா நாணம்.

33 அனங்கசரம் படுமினியென் றஞ்சினாற் போனதெங்கிற் றாக மோக
மனங்குமர னெழில்காணப் புறப்பட்டாற் போற்புளகம் வந்த தெங்கு
நனைந்தெழுவேர் வினிலிழிந்த விருந்தாளிற் செம்பஞ்சி நலஞ்சேர் சோதி
புனைந்ததுபோ லோகைமிகுந் ததுநயனம் வினையேனப் போது நாடி.

34 எம்போலு நொய்யவரே பாராட்டத் தக்கதிந்த வின்ப மிந்தச்
சம்போக முனிவரைநா னெஞ்சினா னினைத்திடவுந் தக்க தன்று
வம்போதான் மதனனமை யிம்முனிபாற் றள்ளுகின்றான் வறிதே யையோ
நம்போத மில்லாமை யென்னாகு மினியென்று நாணி மீண்டு.

35 என்னேயீ தொன்றிருந்த படியெனமற் றிப்படியே யறிந்தி ருந்து
முன்னேநின் றிங்கிதஞ்செ யைம்புலனை யடக்குதற்கு முடியா தென்ற
வன்னேய மிவனறியி னம்மைநகைத் திகழுவனே நாமென் செய்வே
மின்னேயா மறியாமுன் னேகுவதே காரியமற் றேகே மாகில்.

36 நங்காதல் கண்டுமுனி சபித்திடினுந் தெரியாது நாம்போம் போது
பங்கான தவத்தோரைக் கண்டிறைஞ்சா தேகுவதும் பாவ முண்டா
மிங்கான தாகவிவர் களையிறைஞ்சி யேகுவே மெனவே யெண்ணிச்
சிங்கார முனிகுமரன் றனைநோக்கி விடநின்று செங்கை கூப்பி.

37 ஒருகாதின் மாணிக்கக் குண்டலமுஞ் செவித்தாரு மொருதோள் வீழ்ந்த
முருகாருஞ் சுரிகுழலுஞ் சிறிதசைய வவனுடைய முகத்தின் மீது
தருகாத லுடனடந்த விழியிணையை வாங்காமற் றலம்பா ராமற்
பருகுவபோ லாதரத்தி னுடன்பணிந்தேன் ... ..... ..பணிந்த போது.

38 மதனாணை தனையெவர்க்குங் கடக்கரிதா கையினாலும் வசந்த கால
மதனாலு மிடமதுவா கையினாலும் யெளவனத்தி னீதி யாலு
மிதுகாலந் தீவினையே னித்துயரம் படவேண்டி யிருக்கை யாலுந்
திதமாமென் மெய்ப்பாடு கண்டளவே யவன்வலியுஞ் சிதைந்த தன்றே

39 புதிதாக வருமதனை யெதிர்கொள்வ போலெழுந்த புளக மொன்றை
மதியாதென் பால்வருதன் னெஞ்சினுக்கு வழிகாட்டு மாபோன் முன்னே
விதமான பெருமூச்சு நடந்ததுகைச் செபவடந்தான் விரத மெல்லாஞ்
சிதையாது போகாதென் றஞ்சினபோ னடுங்கியது சிதைந்த துள்ளம்.

40 வேறுமொரு பூங்கொத்தின் செவித்தார்போற் கபோலமிசை வெயர்வுதோன்
றேறியதன் னுகரத்தா லெனைப்பார்க்கப் பரந்தெழுந்த விருகட் சோதி [றிற்
மாறரிய வசசோத வாவியினிற் கமலமெலாம் வாணி வேறப்
பாறிமறு கிற்பறந்து திரிவனபோ லெம்மருங்கும் பரந்த தன்றே.

41 இவ்வகையே யறவெளியாய்த் தோன்றுமிவன் விகாரத்தா லிரட்டித் தேறி
மெய்வகையே வளர்மதன விகாரத்தி லகப்பட்டு வினையேன் பட்ட
வவ்வகையா கியவவத்தை யளவுரைக்க முடியாதப் போது நானு
முய்வகைசேர் தவமுனிவன் விகாரமெலா மடைவடைவே யுற்று நோக்கி.

42 இன்பதர மிதன்முன்பு புதிதுண்டு மறியாத விருடி தன்கண்
டுன்பமுடன் மிகவிளைத்துச் சோம்பினாற் போன்றநெடுந் துயிலி னாலே
வன்புடைய விழிப்புண்டா னதுபோன்று மனத்தாசை வகையை யெல்லா
மன்பிலுரைப் பதுபோன்று மிராநின்ற தறமுதிர்ந்த தனங்க ராகம்.

43 என்றுதுணிந் திவ்வளவோ ரிடங்கண்ட பின்பணுகி யிவன்பின் போந்த
துன்றுதவ முனிபாதந் தொழுதெழுந்தெம் பெருமானே தோழ னாகிச்
சென்றமுனி குமரனவ னார்புதல்வன் பேரென்ன செவித்தா ராகி
யொன்றியபூங் கொத்தேதிப் பரிமளங்கண் டாதரித்தே னுரையா யென்ன.

44 அன்னவனு மென்முகம்பார்த் தாயிழையா யிவைகேட்கு மதனா லிப்போ
தென்னபய னுரையாயிங் கெனச்சிறிதே நகையாடி யிவைதான் கேட்க
மன்னியவா தரமுண்டேற் கேண்மினென வகுத்துரைப்பான் வைய மேழுந்
துன்னுபெரும் புகழுடையான் சுராசுரர் முதலானோர் தொழுபொற் றாளான்.

45 வரமாக மொழியுநள கூபரனு மொவ்வாத வடிவி னாலே
யரமாத ரனைவருக்கு மானந்த காரியமா யகல்வா னாட்டுச்
சுரர்வாழ வுடன்வாழுந் தொல்லைமறை நெறிமுனிவன் சுவேத கேது
தரமான வாகாய கங்கையிலே திருப்பள்ளித் தாமங் கொய்வான்.

46 தானொருநாட் சென்றளவி லவ்விடத்தா மரைவனத்தோர் தவள மான
தேனவிழ்தா மரைமலரி லெப்பொழுதும் புலப்படவாழ் திருத்தான் கண்டங்
கானபர வசையாகி யனுராகத் தொடபோர்க்க வன்றப் போதின்
மேனயன மாம்புணர்ச்சி முடிவான பேரின்பம் விளைந்த தன்றே.

47 அப்போதே யப்போதி லவதரித்தா னிவனிவனை யப்பூ மாது
கைப்போதி லேந்திமுனி முகநோக்கி யெம்பெருமான் காட்சி யாலே
யிப்போது பிறந்தனனின் புதல்வனிவன் கைக்கொணீ யிவனை யென்னத்
தப்போதா முனியிவனைக் கொண்டுபோய் வேண்டுவன சதுர்கள் செய்து.

48 புண்டரிகத் துதித்தமையாற் புண்டரிக னெனப்பெயரும் புனைந்து நாலெண்
கொண்டகலை யனைத்தினையு மீந்தருளிக் குலப்பிரம சரிய மாகும்
அண்டர்தொழும் விரதமுந்தான் கற்பித்தா னாகையினா லவன்சே யிந்த
வெண்டிசையும் புகழ்குமர னினிச்செவித்தார் வருவாயு மியம்பக் கேண்மின்.

வேறு.

49 இன்று கடையிருத்தை யாகையினா லீசன்றாள்
சென்றுதொழ வான்கயிலை சேர நெடுவானி
னின்று மிறங்கி நெடுநந் தனவனத்தி
லொன்றுமிரு வேழு முடன்வந்தே மப்போது.

50 மன்னுமணி மாலை மணிமே கலையணிந்து
துன்னுசெவித் தாரதச் சூதாங் குரமணிந்து
பன்னுமல ராற்செய் பலபணியும் பூண்டுமல
ரின்னறவு மாந்தி யிதயங் களிகூர்ந்து.

51 சேர்த்து வசந்தத் திருமடந்தை கைகொடுப்ப
வார்த்துவிளை யாடிவரு மந்தவன தேவதைதான்
பார்த்திவனைக் கண்டு பணிந்து பலகாலு
மேத்திநறும் பூங்கொத் திதுவுங் கரத்தேந்தி

52 இந்த வழகுக் கிசைந்ததே யீதிதனைத்
தந்த குலப்பாரி சாதமுநா னும்பிறந்து
வந்ததனா லுள்ள பயன்பெறநீ வள்ளலே
சிந்தை மகிழ்ந்து செவித்தாராக் கொண்டருளாய்.

53 என்றிரந்து கொண்டிவடா னேகாது பின்றொடர
நன்றிகொண்ட தன்றகைமை போற்றுகையா னாணியிவ
ளென்றியம்பா தேபோக வுற்றிவனை நானோக்கி
நின்றுநண்பா வீத்தா னெறிகேடு தானேது.

54 ஏத்திவரு கின்ற விவளா தரந்தீரச்
சாத்தியருள் கென்றவள்கை தன்னின்று நான்வாங்கி
வாய்த்தசெவித் தாராக வைத்தேனி தாகையினாற்
கோத்த விரைப்பாரி சாதப்பூங் கொத்தென்றான்.

55 என்னு மளவி லெனைநோக்கிப் புண்டரிகன்
புன்முறுவல் செய்து புனையிழா யீதெல்லாம்
வன்னமுறக் கேட்டு வருந்துகின்ற தேனீது
தன்னினினை வுண்டடேற் றரலா மெனக்கூறி.

56 தானேவந் தென்செவிமேற் றன்செவிமே னின்றொளிருந்
தேனேரும் பூங்கொத்தைச சேர்த்தினா னப்போதென்
மானேய நெஞ்சிவன்கை வைத்திடத்தே சென்றொடுங்கிக்
கோனேயின் புற்றதெல்லாங் கூற முடியாதே.

57 ஆண்டமுனி வோனு மணைந்தென் கபோலதலந்
தீண்டியவா னந்தத்தாற் செங்கை விரனடுங்கிக்
காண்டகுநா ணொடிரவி காந்தச் செபமாலை
தாண்டி விழவதுவுந் தானறியா தேநின்றான்.

58 யானதனை யப்பொழுதே யேற்றுக்கொண் டென்கழுத்தின்
மான முடனணிந்து மற்றவன்றன் கைமலர்க
டானெனைவந் தன்பாற் றழீஇயதுபோற் பேரின்ப
மானதெலா மெய்தி வருகுகின்றே னப்போது.

### வேறு.

59 வந்தொரா யிழையாள் வணங்கிமா தேவி மஞ்சன மாடிநின் றுன்னை
யிந்துவா ணுதலாய் பார்த்துநிற் கின்றா ளென்றவள் விரைந்துவந் துரைப்ப
விந்தவா சகத்தாற் புதிதகப் பட்ட விளம்பிடி யானது நுதன்மேன்
முந்தவீழ் தோட்டி வசத்தினா லியங்கு முறைமைபோ லேவச மின்றி.

60 அவனழ கான வமுதவான் சேற்றி னழுந்தினாற் போலவுங் கபோலத்
திவர்தரு புளக மானமுட் களிலே யெழுந்துகோப் புண்டபோ லவுமத்
தவமுனி முகமேற் பற்றிய வொண்கண் டனைவருந் தத்தினால் வாங்கி
யுவமையி னன்னீ ராடுவ தாக வொன்றிரண் டடியிடு மளவில்.

61 மற்றைமா முனிவ னிவன்வலி யழிந்த வகையறிந் துரிமையி னுடனே
யுற்றகோ பத்தா லிவன்முக நோக்கி யுனக்கிது தக்கதொன் றன்று
சற்றரா னவர்கண் முயல்வதிக் கருமந் தபோதனர்க் கடாதது கண்டா
யிற்றைநா ளுனக்கிவ் விளந்தலை நெஞ்ச மெங்ஙனே வந்தது கெட்டேன்.

62 உன்னிலை மைகளு மொடுக்கமு நெறியு முயர்தவத் தளவிலா தரமுங்
கன்னிய ரின்பங் களினுறு தரமுங் கல்வியு மிப்பொழு தெங்கே
நின்னிக ருரவோ ரிப்படி யழிந்தா னிறைந்தநற் குணங்களுக் கெல்லா
நன்னிலை யான புகலிட மெங்கே நானிதற் கென்கொலோ மொழிவேன்.

63 அங்கையி னின்றுஞ் செபவடம் வீழ்ந்த ததுவுநீ யறிந்திலை யென்னே
தொங்குத லறவே தூய்மையா நெஞ்சுந் துவக்கற வழியுமோ கெட்டேன்
றங்கிய தவத்தோ யுனக்கிது வேண்டா தையலாள் கொண்டவுன் னெஞ்சை
யிங்கினி மீளா யிப்படிச் செயுமோ வென்றவன் சொல்லமற் றிவனும்.

64 என்னையோ விந்த வார்த்தைசொல் வதுநீ யென்செப மாலைகொண் டிந்தக்
கன்னிதான் போகக் கடவளோ விடேன்காண் கண்டுகொ ளென்றுரை செய்து
மன்னுவார் புருவம் வளைத்திதழ் துடிப்ப வலியவே பண்ணிவெங் கோபந்
துன்னுமா போனின் றளிதரு முகத்தாற் றொடர்ந்துவந் தென்முக நோக்கி.

65 என்செப மாலை தந்தலா தானை யேகலாய் பேதைநீ யென்னத்
தன்செப மாலை யாகவே கொண்டென் றனமிசை முத்தமா லையினை
மின்செறி மேனி முனிகையிற் கொடுத்து வெயர்வினின் முழுகிவிட் டிருந்தும்
பொன்செறி கமல வாவியி லுள்ளே புகுந்துநீ ராடிமீ தேறி.

66 திரையெறி பெருக்கா றணையிலே தேங்கித் தேங்கிநின் றெதிர்செலு மாபோல்
வரைதரு தாதி மார்சிறைப் பட்டென் வசமழிந் தன்னையோ டேகிப்
பொருவற விளங்கு மென்மனைப் புகுந்தேன் புகுந்தவப் பொழுதுதான் முதலா
வொருசெய லின்றி விரகமோ கத்தா லுடல்சுழன் றுள்ளமு மறைபோய்.

67 இங்குவந் தனமோ வங்குநின் றனமோ விருந்தனம் போதுகின் றனமோ
தங்குநந் தமரோ டுரைத்திருந் தனமோ தனித்துரை யாதிருந் தனமோ
பொங்குள மகிழ்ந்து நகைத்திருந் தனமோ புலம்பியே திகைத்திருந் தனமோ
வெங்கிருந் தனம்யாம் யார்கொலோ நம்பே ரேதென வொன்றறி யாதே.

68 இதற்குமுன் காம நோயறி யாதே னென்னநோ யீதென வறியா
திதற்கெது செய்வேன் யார்க்கெடுத் துரைப்பே னெங்ஙனே யேகுவே னென்
றுதித்தவே தனையா லொன்றறி யாதே யுயர்மனை மேனிலத் தேறி [றென்
மதித்தபாங் கியர்கள் யாரையுந் தகைந்து மகிழ்விளை யாட்டெலா மறந்து.

69 சீதள மணிச்சா ளரத்திலே வதனஞ் சேர்த்தவ னின்றவத் திசையைக்
காதலி னோக்கி யத்திசைக் காற்றைக் கலந்தவன் விடுத்தது தைப்போ
லாதரித் தெதிர்கொண் டவனதி தூர மாகவு மாதப னளவின்
மேதகு கமல மென்னமற் றவன்மேல் விருப்புவைத் தங்ஙனே நின்று.

70 ஈதவ னமக்கு நல்கிய செவித்தா ரீதவன் செபவட மென்றென்
றோதர வுடனே யவற்றையே நோக்கி யாங்கவை பற்றுக்கோ டாக
மேதக விருந்தே னிருந்தபோ தெனக்கு வெற்றிலை யிடுந்தா ளிகைதான்
றோதவிழ் வாவிக் கென்னுடன் போந்தா டாழ்க்கநின் றென்னிடை வந்தாள்.

71 வந்தெனை நோக்கி யெம்பெரு மாட்டி வாய்த்தவிண் ணப்பமொன் றுண்டு
சிந்தனை யொழிந்து கேட்டரு ளென்று செப்புவா டெய்வவா வியிலே
முந்துற நடந்த பொழுதுநாங் கண்ட முனிகுமா ரரிலுனக் கிந்தக்
கோந்தவிழ் செவித்தார் தந்தவன் முன்னங் கூடவந் தவனையு மொழித்து.

72 பையவந் தடியேன் வருநெறி யருகே பதுங்கிநின் றெனையழைத் தணங்கே
தையலிங் கிவளா ரார்மகள் பேரென் சாருமூ ரேதெனக் கேட்ப
வையகம் பரவும் வள்ளல்காந் தருவ மன்னர்கோ னஞ்சன்மா மகள்பே
ரெய்யும்வெஞ் சிலைவேள் புகழ்மகச் சுவேதை யேமகூ டம்பதி யென்றேன்.

73 என்னமற் றவனுந் திகைத்துநின் றொன்றை யியம்புவான் போலவந் தென்றன்
முன்னுரைத் திடவுங் கூசியென் முகமே முறைமுறை நோக்கிநீ டியிர்த்துப்
பின்னையுற் றிரந்து கொண்டுநின் றன்னைப் பெருகவுட் கொண்டதென் னுள்ள
முன்னிடத் தொருகா ரியமுள தணங்கே வுரைக்கவோ வொழியவோ வென்றான்.

74 யானுமப் பொழுது வணங்கிநின் றெந்தா யெங்களுக் குங்கள்கண் பார்வை
யானதுட் படவுந் தீவினை யகற்று மாகையா லருளிய கருமந்
தானினிச் செய்கை கேவல மன்றே சங்கியா தருள்செயீ ரென்ன
நானுயிர்ப் பாங்கி யாகவே நெஞ்சா னயந்தருட் பார்வையா னோக்கி.

75 அங்குநின் றதொரு பச்சிலை மரத்தி னரும்பிய கொழுந்தெலாம் பறித்துப்
பங்கயந் திகழுஞ் செங்கையாற் பிசைந்தோர் பாறையிற் பிழிந்ததின் சாற்றாற்
சங்கையின் றியிலே போர்த்தவற் கலையின் றலையிலே சிறிதுகீண் டெழுதி
மங்கைசெங் கையிலே யொருவரு மறியா வண்ணநீ கொடுவெனத் தந்தான்.

76 என்றனை கையிலே யிருந்தபட் டிகையை யெடுத்தவள் காட்டமற் றியானுந்
தொன்றுபட் டுவருங் காதலர் போலத் தொழுதிரு கைகளால் வாங்கி
நின்றறப் பதறி நெஞ்சுமுன் னோட .. .....திரு தனங்கள்பூ ரிப்ப
வொன்றினைப் பலகா லுவந்துவா சித்தே னுற்றவா சகமது கேண்மின்.

77 தனக்கிரை யான தாமரை வளையந் தானெனத் தாளமா லையினை
நினைத்துடன் கௌவி வெள்கிய வன்ன நெடுந்துய ருழந்திருந் ததுபோற்
சினைக்கயல் விழியார் முத்தமா லையினைச் செபவட மென்றுகேட் டுண்டு
மனத்திடர் பெருகா நாணுறா வருந்தா மயங்குகின் றானொரு முனியே.

78 என்னும்வா சகத்தைக் கண்டபின் குருடர்க் கிருண்டகூ ரிரவுவந் தெனவு
மன்னுகா னிடையே வழிபிழைத் தவர்க்கு வருந்துதிப் பிரமமுற் றெனவும்
பன்னுமா றறியா வூமனுக் குள்ள பழையநாக் குஞ்சிதைந் தெனவு
முன்னமே மதனன் மயங்கிய வெனக்கு மோகமே மிகவளர்ந் ததுவே.

79 அத்தர ளிகையை யுவந்துவந் தன்பா லணைத்தணைத் தளகமு நுதலு
மெத்தன வொடுதை வந்துதை வந்தென் மெய்யனை யெங்ஙனே கண்டா
யெத்தனை நேர மவனிடை நின்றா யென்சொனா னிரந்துகொண் டன்பி
னெத்தனை தூரம் வந்தன னெனக்கேட் டிங்ஙனே பகலெலாங் கடந்தேன்.

80 அப்பொழு தொருவ னிதயரா கந்தோய்ந் தறச்சிவந் தென்னவா னிரவி
மெய்ப்படு வலையஞ் சிவந்தது கமல விரைமலர்க் காடுகள் குவிந்த
வொப்பருங் குமுத வனமெலா மலர்ந்த வொன்றிய சக்ரவா கங்க
டப்புடை யவர்போ லகன்றவப் பொழுது தானொரு சேடிமுன் வந்து.

81 செந்திரு வனையாய் போற்றிமுன் றந்த செபவடம் வாங்கவந் தேனென்
றந்தமில் வாவிக் கரையினுங் கண்ட வருந்தவ முனிவரி லொருவன்
வந்தனன் வாயி னின்றன னென்ன மகிழ்ச்சியான் மனத்தைமுன் விடுத்து
முந்துறத் தவளக் கஞ்சுக மாதை முனிவனை யழையென விடுத்தேன்.

82 விடுத்தபி னந்தக் கஞ்சுகக் கொடிபின் வெண்ணிலா வரவத னுடனே
யடுத்தின வெயிலுன் வருவதே போல வவிரொளி பரப்பியென் னெஞ்சந்
தொடுத்தபுண் டரிக னிதயமே யன்ன தோழனுங் கபிஞ்சல முனிவன்
கெடுத்ததொன் றுடையார் போன்றுமொன் றிரந்து கேட்பவர் போன்றுமுன்
[வந்தான்.

83 வந்தமா முனிவன் மனக்கருத் தெல்லாம் வந்தகோ லத்தினு லறிந்து
முந்தெழா வணங்கி யாசனத் திருத்தி முளரியந் தாள்கழீஇ யெனது
சுந்தரா திரேகை யுத்தரி யத்தாற் றுடைத்தரு கேநிலத் திருந்தே
னந்தமா முனியுஞ் சிறிதுபோ தொன்றை யருள்செயா தங்ஙனே யிருந்து.

84 ஒன்றுரைப் பவர்போ லென்முகம் பார்க்கு முரைசெயான் றரளிகை தன்னை
நின்றுபற் பலகா லெண்ணுமற் றிதனு னெறிமுனி நினைவைநா னறிந்து
துன்றுமெய்த் தவனே யையுற வேண்டா தோகைதா னிவளெனக் குயிர்கா
ணின்றுரைத் தருளாய் நெஞ்சிலுள் ளதெலா மென்னமா முனிவர னுரைப்பான்.

85 வரிகழ லரசர் வான்குல வித்தே வருகவென் சொல்லுகேன் வாக்கும்
புரிதரு கின்ற தில்லைநா ணத்தாற் புகலநான் போந்தவிக் கருமம்
விரிசடை யிதனுக் கேற்றதோ விந்த மேகலைக் கேற்றதோ விந்த
விருமர வுரிக்கு மேற்றதோ வென்னே யிப்படிச் செய்ததே தெய்வம்.

86 எங்களுக் கிதுபோற் பரிபவ மில்லை யென்னினு முபா[illegible]வே றில்லை
யுங்களுக் குரைத்துத் தீரவே வேண்டு முரைசெயா திருக்கிலோ விந்தக்
கங்குலிற் பெரிய தொருபிழை விளையுங் கலந்ததன் னுவியை [illegible]ந்து
மங்கடுத் தவனைக் காப்பதே முறைமை யாகையாற் சொல்லுகேன் கேண்மின்.

87 அப்பொழு துன்முன் னவனைநான் கோபித் தறக்கொடி யனசில பேசித்
தப்பிது தவிர்நீ யென்றுபூ சைக்குத் தருமலர் கொடுவரப் போனேன்
மைப்படி குழலாய் நீயுநீ ராடி வந்துவிட் டனையதன் பின்னு
லெப்படிச் செய்தா னிவன்றனி நின்று னிவனைநா மறிகுவா மென்று.

88 ஆங்கவன் முன்பு நின்றிடத் தேசென் றங்கொரு துற்றினின் றொளித்துப்
பாங்குடன் பார்த்தேன் கண்டிலே னதனாற் பரிதபித் தனங்கதா பத்தாற் [வற்
பூங்கொடி யவள்பின் போகிவிட் டனனோ பொலன்கொடி போனபின் றெளி
நீங்கெனைக் காண நாணியே யினனோ வென்செய்தா னென்றுநின் றழுங்கி.

89 சென்றிலச் சையினுன் முடிவிலே தேனுஞ் செய்யினுந் தெரிந்திரா திவனை
யின்றினித் தனியே விடுகைகற் பல்ல வென்றுகொண் டவ்விட முதலாத்
துன்றுமைப் பொழிலும் வாவியுங் கிரியுஞ் சுனைகளு மெங்கணு நாடி
நின்றறத் துயரங் கூர்ந்துகா ணும னெஞ்சழிந் தேங்குமப் போது.

90 நிறைமலர்த் தடத்துக் கண்ணிதா யெங்கு நெருங்குபூம் பொழிலுடைத் தாகிச்
சிறையளிச் சமுக மின்னிசை பாடச் செறிந்துகோ கிலமெலாங் கூவக்
குறையறக் குலவி மயிலின மாடக் குருமலர்த் திரளெலாங் கண்டு
மறுவறப் புதிய வசந்தன்வீற் றிருக்க வகுத்ததோர் மண்டப மெனலாய்.

91 அதிமனோ கரமா யிருப்பதோர் கொடிமண் டபத்திலே யறிவெலா மழிந்து
முதிரவே கருத்து முற்றியோ ரிருக்கு முறைமையே போலவு மழுங்காப்
புதியவோ வியமே போலவுஞ் சிறிதோர் புறத்திலு மலைவுறா தொருத்த
னிதியமா வொழுக்கந் தன்னினின் றலைந்து நெஞ்சுணீ யிருக்கவுந் தனியாய்.

92 மிகவனு ராக முடையனா யிருந்தும் வெளிறனா யொன்றினை வாக்காற்
புகலுதல் செய்யா திருந்துமா மதவேள் போரின்வே தனையுரைப் பவனா
யகமுறு துயரம் பொறுக்கமாட் டாம லஞ்சியோ டியதுபோ லஞ்சு
தகைதரு புலனு மொளிப்பவெற் றுடம்பு தன்னையே தரித்திருப் பவனாய்.

93 சற்றிமை திறவாக் கண்களி னுள்ளே தயங்குகா மக்கனற் புகைவந்
துற்றது போலக் கண்ணினீர்த் தாரை யொருசிறி தொழுக்கற தொழுகச்
செற்றியே கொடியிற் றளிர்களும் பூவின் றளிகளுந் தீந்துதீந் துதிர
முற்றிய காமக் கனன்முகந் தெழுந்து மூசசுமேன் மேண்மிக வீச.

94 கன்றிய வாமக் கபோலம்வீழ்ந் திருந்த கானக கிரணம்வா னுதன்மே
லொன்றிய வராகக் குழம்பெலா மனைந்த தொப்பவே யொளிரமுன் செவிமேற்
றுன்றிய பாரி சாதவா சத்தாற் சூழ்ந்தவண் டுகள்செவி யருகே
சென்றுடன் மதன மோகமந் திரமே செபிப்பது போன்முரன் றார்ப்ப.

95 மதனவே ளெய்த மலர்க்கணைத் தாது வடிவெலாம் பதிந்துநின் றதுபோல்
விதனமே செய்யும் விரகதா பந்தான் மெய்யெலாம் புளகமுற் றேற
முதிரவே காமன் மோகன நீற்றை முற்றுநின் றெறிந்தன போலப்
புதியபோ துகளிற் சுண்ணமா னதெலாம் பொழிலிளங் கொம்புகள் வீச.

96 இளமலர்க் கொடிக ளெழில்வன தெய்வ மெனமொழி மகளிர்செய் தருளும்
வளமிகு கலசா பிஷேகதா ரைகள்போன் மதுவினைப் பொழியவே வார்க்கக்
களகள வென வாரவா ரித்துக் காமவெம் படையெழு வதுபோற்
குளிர்பொழின் முழுதுங் குயிலினங் கூகூ கூவெனச் செவிசுடக் கூவ.

97 பொற்றலை யம்பைப் புதையெழக் காய்ச்சிப் போர்மதன் புடைப்பதே போலச்
செற்றிவண் டுகள்சூழ் செம்முகை களினாற் செழுமலர்க் கொம்புக ளுறைய
மற்றிவ னெஞ்சிற் றவவலி யின்ன மாய்ந்ததோ வில்லையோ தானென்
றுற்றறி வதுபோற் றென்றல்சென் றுடலு முள்ளமு மெள்ளவே தடவ.

98 வைகறை மதிபோல் வெளுத்துவெங் கோடை வந்தடர் சங்குபோ லிளைத்துச்
செய்கன லுள்ளே பற்றிய சந்தின் செழுமலர்க் கொம்புபோல் வாடி
நைகர மான குருடனே போன்று நாவிலா வூமனே போன்றும்
பெய்குர லறியாச் செவிடனே போன்றும் பேயடிப் புண்டவர் போன்றும்.

99 வீரவேள் வெற்றித் துவசமே போல விளங்கிய முத்தமா லையினைச்
சேரவோர் கையான் மார்புட னணைத்துத் தீர்விலா மோகமேற் கொண்டே
யேருலா வியசீர் மதனசிங் கார விரதமே வடிவுகொண் டிறங்கிப்
பாரின்மே லிருந்த தென்னவே யிருந்தான் பாவியே னிதனையுங் கண்டேன்.

100 கண்டிமை யாமற் பார்த்துநின் றுள்ளங் கலங்கினொந் தறநடு நடுங்கி
மண்டிய வாசா ரத்தினு லறிவால் வானவர் முனிவர்கண் முதலா
மெண்டிசை யோரும் வியந்துகொண் டாடு மிவனையு முட்பட வென்னே
திண்டிறன் மதவே ளிந்நிலை கண்டான் சிலைமதன் வலிமையே வலிமை.

101 என்றுசென் றருகே யிருந்தவன் றோண்மே லென்கைபோகட்டுயிர்த் துணைவா
நன்றுநன் றிதுதானென்சொல்கண்விழியாய்நண்ணிய துரைசெயாயென்னக்
கன்றிநின் றறவே சிவந்தெழுங் கண்ணீர்க் கடலிலே மிதந்திமை யிமையோ
டொன்றுகண் களினை மெல்லவே விழியா வுற்றெனை நோக்கிநீ டுயிரா.

102 செழுமணி மிடறு தழுதழுத் தறவே செப்பவாய் மொழிதடு மாற
வழுதழு திருந்து துணைவநீ யிந்த வடைவெலா மறிந்திருந் தொருவேன்
பழுதற வினனே கேட்டுவிட் டனையே பாவியே னென்றுவே றொன்றில்
விழைவற விருந்தா னுமற் றிதுதான் மீட்கொணு தென்றுளே கருதி.

103 ஆகிலு மிதனை யானது பார்ப்பே மடுத்தவன் வழியலா வழிமே
லேகிய பொழுது கடிந்துமீட் காம விருக்கைபண் பன்றென நினைந்து
மோகித னுன வவன்முக நோக்கி முறைமையோ நமக்கிது நண்பா
நீகரு தியது குருவுப தேச நீதியோ தருமநா னெறியோ.

104 இருநா களிக்கு மாதர்கூட் டத்தை யின்பமென் றுதரித் தொழுக
றருமமி தென்று நச்சுமென் கொடிக்குத் தண்புனல் சொரிவது கண்டாய்
பரிமள நீல மாலையென் றிருண்ட பாம்பினை யணிவது கண்டாய்
விரிசுட ரழலைச் செம்மணி யென்று மெய்யினே டணைப்பது கண்டாய்.

105 ஆகையா லிந்த நெறியலா நெறிபோ யயருமைம் புலன்களை மீட்டு
மோகமா னதுவு மாறிநீ தெளியாய் முனிவனே யென்னவென் மொழியைப்
பாகையாற் றகைந்து தன்கணீர் துடைத்துப் பரிவினு லென்கரம் பற்றி
யோகைசேர் துணைவா பலபடி மொழிந்தெ ளென்றுகே ளெனவவ னுரைப்
[பான்.

106 உருத்தெழு முரகக் கவிடம் போலு முருவிலி கணைகளுக் கிலக்காய்க்
கருத்தழிந் திலையே யாகையி னுலே காரியஞ் சொலவநீ வல்லை
தரித்திட நெஞ்ச முடையவற் கன்றோ சாற்றுவ திவையெலா மினிமேற்
றிருத்தவு மிந்த நெறியுப தேசஞ் செய்யவுங் காலமோ வல்ல.

107 என்னைநீ யிடித்துப் பேசவும் வேண்டு மியானுநீ யேதுரை செய்தா
யன்னதே செய்வே னுகிலு மினியென் னடைந்தபே ரவத்தைகண் டனையே
மன்னுமாருயிர்போமுன்னமென் னுள்ள வடவையங்கனலினுங்கொடிதாய்த்
தன்னிலே யெரியுங் காமவெந் தீக்குத் தக்கா ரியமினி முயலாய்.

108 என்றுரை செய்து மீளவுங் கண்க ளிரண்டையு மிமைப்பற மூடிப்
பொன்றினர் போலே யிருந்துவிட் டனனப் போதிலும் பலபல முகத்தாற்
கன்றியு மூவந்து மிரந்துகொண் டுரைத்துங் கலைகளாற் றேற்றியும் பார்த்தே
னொன்றிலுந் தெளியக் கண்டிலே னதனு லுளமலி துயரினே டெழுந்து.

109 சந்தனத் தளிரை யளவறக் கொய்து சாறுகொண் டெங்கணும் பூசிச்
சுந்தரக் கற்பூ ரத்தரு வுலர்ந்து தோலிடைத் தோலிடை நின்ற
பைந்துகட் டிரளை வாங்கிவேர் வடங்கும் படிநெரித் துடம்பெலாந் திமிர்ந்து
மூந்துறப் பிழிந்த சந்தனச் சாற்றை முகந்துமார் பகத்திலே தேக்கி.

110 அரம்பையங் குருத்தால் வீசினேன் வீச வீசவெவ் வழல்கொளுந் தியபோற்
றரம்பயில் பாய நீந்தது பின்னுஞ் சருகெழ .....மாற்றிப்
பரம்பிய பாய விப்படிப் பலகாற் படுத்தெனு லாவது பார்த்தேன்
வரம்பறு தாப மொன்றிலுந் தணியா வாறுகண் டதிபய மெய்தி.

111 ஒன்றிலுந் தீரா திந்தநோ யிவடன் னுவகையா முயக்கினு லல்லா
தென்றுகொண் டொன்றும் விசாரியா துன்பா லிரந்துவந் தனனிதற் கினிமே
னன்றுறுங் கருமஞ் செய்கநீ யென்று நவின்றிவ ளேதுசொல் லப்போ
கின்றன ளென்றென் முகத்தையே நோக்கிக் கேட்குமா றுதரித் திருந்தான்.

112 நானுமீ தெல்லாங் கேட்டிருந் தெய்தா நல்லமு துண்டவர் போல
வானவா னந்தக் கடலிலே முழுகி யவனையு மென்வச மாக்கும்
வேனின்மா மதனுக்கென்னகைம்மாறுவினையனேன் செய்வதென்றெண்ணி
மோனமாய்நாணித்தலைகவிழ்ந் திருந்தோர் மொழிமொழி வேனெனு மளவில்.

வேறு.

113 யாரெனுன் றனுங்கி யிருந்தே னெனக்கேட்டுத்
தேனென்று சொல்லன்னை சேடியருந் தோழியருந்
தானென்ற வந்து தலைப்பட்டா ளவ்வளவில்
வானென்று மாதவத்தோன் வாளா வெழுந்திருந்து.

114 கொம்பேநான் வந்து குவானேர முண்டினிநீ
வம்பேயென் னண்பன் மறுகாமற் காத்தருளென்
றம்பேய் விழிததும்ப வஞ்சலி...... ........
வெம்பேய்கொண் டார்போல் விடநெருக்கிக் கொண்டகன்றான்.

115 அன்னையும் வந்தெ னருகிருந்தா ளப்போ
தின்னது செய்தா ளதுசொன்னு ளென்றறியேன்
மன்னிய நெஞ்சறைபோய் வாடி யயர்ந்திருந்தேன்
பின்னை யவளும் பெயர்ந்தாண் முகநோக்கி.

116 தேவன் றனபாலன் சேரலர்போல் வானிரவி
தாவும் பரித்தேருந் தானுங் கடற்புகுந்தான்
கூவுங் குயில்கள் கோலா கலத்துடன்வே
ளேவுங் கணைமாரி யேதளவென் றோதுவேன்.

# காதம்பரி.

117 கற்ற கலைதேர் கபிஞ்சலன்வந் தம்முனிசேய்க்
குற்றபிழை யெல்லா முரைத்ததுவுங் கேட்டனையே
மற்றினியென் செய்யும் வகையறியே னென்றனக்குத்
தெற்றெனவுண் டாகச் செயுங்கா ரியமுரையாய்.

118 மாதர்க் கணியீர மடமுநா ணுந்துறந்து
கோதற்ற பெண்மை குலமொழுக்கம் பாராமன்
மேதக் கவருரைக்கும் வீணுரைக்கு மஞ்சாம
லாதிக் குரவ ரனுமதியு மில்லாமல்.

119 நாமேபோய் நண்ணினு னங்குரவ ரைப்பிழைத்த
தீமேவு வெம்பாவஞ் சேரு மதுபார்க்கில்
யாமேது பட்டே மெமைபிரந்து கொண்டகன்ற
தூமேனி மாதவத்தோன் சொன்மறுக்க நீங்குவரும்.

120 ஈதெல்லா நிற்க வினியொன்று நம்முடைய
காதலா லந்தக் கலைமுனிக்கோர் தீங்குவரிற்
றீதிலா நங்குடியைச் சேரக் கெடுத்துவிடு
மாதலாற் செய்யுமதெ னன்னமே யென்பளவில்.

121 பாதலத்திற் சேடன் பணமண் டலமிந்தப்
பூதலத்தை விட்டுப் புறப்பட்ட தேபோல
வேதனைக்கு வித்தான வெய்யமதி மண்டலம்வந்
தேதமுற்ற பாவிக் கெரிதூஉ யெழுந்ததே.

122 காமத்தீ யுள்ளே கனலப் புறம்பெல்லாஞ்
சோமத்தீ வந்து சுடநஞ்ச முண்டாரைச்
சேமத்தீக் காரரவந் தீண்டினற் போன்மயங்கி
வேமத்தீ யாற்றமல் வீழ்ந்தேன் றளிகைமேல்.

123 சோரு மளவிலவ ளேயநறுஞ் சாந்தமணிந்
தாருமணிக் காந்த மணிதன்மேற் சேர்த்தொற்றிச்
சேருங் கவரியினல் வீசச் சிறிதுணர்ந்து
சாருந் தரளிகையைச் சற்றே கடைக்கணித்தேன்.

124 வெய்யநோய் கொண்டேன் விழித்ததுகண் டாங்கவடா
னையகோ வென்றென் றடிமேல் விழுந்தழுது
செய்யபூ மாதனையாய் தேறுகநீ யஞ்சாதே
யுய்யநான் போயுன் னுயிர்க்கேள் வனைக்கொணர்கேன்.

125 போகவு மீண்டு வரவும் பொழுதாகி
லேகுக வென்னே டினியென்ன நாணமிக்குச்
சோகமு மிந்தத் துயருமவன் றனலா
தாருந் தமர்களெலா மாற்றுகைக்கு வல்லரோ.

126 என்ன வதனுக் கிசைந்தனங்க னேவிளையா
வன்னவள்செங் கைதாங்க வாய்ந்தாய்ந் தெழுமளவிற்
றுன்னிமித்த மாகத் துடித்ததுகண் ணுங்கதுகண்
டென்னபிழை தெய்வ மினிவிளைப்ப தென்றஞ்சி.

127 வெள்ளிலைகற் பூரம் விரைப்போது சாந்தமுத
லுள்ளவெலாங் கொண்டவள்பின் போத வொருவேனுந்
தெள்ளுநறுஞ் சந்தனச்சே றுடிச செபவடமும்
வள்ளலணி பூங்கொத்தும் வான்றுணையா கக்கொண்டு.

128 செம்பத்ம ராகக் கிரணத்தாற் செய்தனைய
பைம்பட்டொன் றுலே பழுதறவே முட்டாக்கிட்
டிம்பர்க்கு ணேராக யாரு மறியாமல்
விம்பச் செழுமதிதோய் மேனிலத்தி னின்றிறங்கி.

129 வான்சோலைக் கேகும் வழியே புறப்பட்டேன்
றேன்செவித் தாரினறுந் தெய்வப் பரிமளத்தாற்
கான்சூ ழளிகள் கரும்பட்டாற் போர்த்ததுபோற்
றுன்சூழ நான்போந் தனிக்குத் துணையாக.

130 காமன் சிலைவாங்கி யம்படைசிக் காலைவாய்ச
சோமன் கரந்தாழ்த்துத் தூரநின்று தாழ்சசிசெய
நாமந் தருநாணைப் பின்னுக்கி நன்னெஞ்சு
மாமன்பு மாதரமு மைம்புலனு முன்னோட.

131 வந்து வழியின் மலரினறுந் தூளிகளாஞ்
சிந்து புழுதி புடைத்தேறுஞ் சேவடியைச்
சந்த்ரிகைதன் னுலுருகிச சந்திரகாந் தங்களினின்
றுந்தியரித் தோடு முதகத்தி னுற்கழுவி.

132 தாமத் தரளிகையைப் பார்த்துத் தரளிகாய்
யாமத் திடையே யெமையிழுத்து வந்தமத
னுமக் குரிசிலையு நம்மெதிரே தள்ளிக்கொண்
டேமத் துடன்வரிலோ வென்று சிலபேசி.

133 சீராடிக் கொண்டு வருமளவிற் றெள்ளுதிரை
நீராவி யின்குடபா லாகநெடுந் தூரத்தே
வாரா வொருகுரலென் வன்செவியி லேகாய்ந்த
நாராசம் போனுழையா நன்னெஞ்சை வாட்டியதே.

134 வந்தமொழி யாலும் வலக்கண் டுடித்திடலுஞ்
சிந்தையழிந் தோடிச் சிறிதிடந்தான் சென்றளவி
லந்த நெடுங்குரலோ ராண்குரலா யக்குரலு
னெந்தை கபிஞ்சலன்ற னீடுபெட்ட தோர்குரலாய்.

135 கெட்டேன் விதியே கெடுவாய் கெடுத்தாயே
மட்டேர் கணைமதனா வன்பாவி வாழ்ந்தாயே
பட்டே கிடந்தனையே பாவியேன் நண்பாவோ
விட்டே னினிவாழ்வு வேண்டேனான் வேண்டேனே.

136 திங்களு மன்மதனுந் தென்றலுமற் றெல்லீரு
மிங்கு முயன்றெண்ணு மெண்ணமெலா முற்றியதோ
வுங்கள்கண் ணிப்போ துறங்கியதோ பாவிகா
ளெங்கள் குடியை யிறங்கவிட விட்டீரே.

137 வெந்ததே நெஞ்சம் விழுந்ததிடி யென்றலைமே
லுய்ந்தினி நண்பா வுனைப்பிரிந்து வாழேன்காண்
வந்ததுயர் காணாத மாச்சுவேதாய் நீயு
மிந்தமறஞ் செய்யவிவ னென்னபிழை செய்தானே.

138 நேய முடைச்சுவேது கேதுவே நின்புதல்வ
னாயுவைவெங் காம னடப்பறித்துக் கொண்டான்கா
ணீயிவை யொன்று மறிந்திலையே நீளெத்துட்
டீய கொடுவினையே செய்வதினிச் சொல்லாயே.

139 சாற்று தவமே தருமமே சத்தியமே
யேற்றமுட னீங்களினி யெங்கே யொதுங்குவீர்
நோற்ற கலைமகளே நூல்வாங்கி விட்டனையே
போற்றியபொன் னாடே பொலிவழிந்து போயினையே.

140 வன்னெஞ்சா யென்னை மறந்தா யுனக்கிந்தக்
கன்னெஞ்சார் தந்தார் கடைப்பிடியி னீயிறக்க
வின்னஞ்சா காதிருந்தே னென்னே யிரோன்காணான்
பின்னஞ்சா தேவருவேன் பின்பார்த்துப் போகாயே.

141 ஆரோ டினிதிருப்பே னாரோ டினிமகிழ்வே
னாரோ டினிமனத்தி லுற்றதெலாஞ் சொல்லுவே
னாரோ துணையாவா ரையோ தமியேனுக்
காரோ வினித்தஞ்ச மாற்றேனா னாற்றேனே.

142 உன்னைப் பிரிந்து முயிர்வாழ வல்லேனோ
நின்னைத் தொடர வருகின்றே னிட்டேரா
வென்னைப்பின் பாராம லேகினையே மாச்சுவேதை
தன்னைச் சிறிது நினைந்திலையே தக்கோனே.

143 என்று பலவிப் படியிப் படிக்கூட்டிக்
கன்றி யிரங்கிக் கன்ன்றுதனன் றேகதறு
இன்ற குரற்கேட்டேன் கேட்டுயிர்போய் வெற்றுடலா
யொன்றை யறியா துலைந்துவாய் விட்டலறி.

## வேறு.

144 நடைமெலிந் கரைக்கொடிக்காட் டுத்தரியங் கோலவிழ வோடிக் காட்டு
மேம்பள்ள மறியாமல் விழுந்தெழுந் தும்பற்றி மிகத்தள் ளாடிக்
கூடவெனைச் சிலதூக்கிக் கொண்டுபோய் விட்டதுபோற் குவாறா ரத்தை
நாடியொரு கொடிவரையிற் கடந்துகொடி மண்டபத்தை நானே நண்ணி.

145 அங்கொருசந் திரகாந்தப் பாறையிலே பலமல ரலமைக்கப் பட்டுப்
பங்குடைய தொருகாம் பண்ணுசய னம்போலும் படுக்கை மீதே
யிங்கொருவன் வருமோசை கேட்டசையா .... ..னனவுங் காமப்
பொங்குபெருங்கனலாறித் துயில்கின்றான் போலுமெனைப்புலந்தான் போன்றும்.

146 திருநுதலிற் சந்தனமுங் கர்ப்பூர முழுப்பூச்சுஞ் செங்கை மீது
தருகமல வளையத்தா லணிகாப்பு மற்றதனைத் தாநுமுந் தூலும்
விரிதருவா ழைக்குருத்தான் மேலிடுமுத் தரியமுமாய் விளங்குங் காமந்
குரியசமா ராதனைக்கா மொருவிரதங் கொண்டங்கே யுறைவான் போன்றும்.

147 இகைத்தழுதே நீர்வற்றிச் சில்வி த்தம் பரந்ததுபோற் சிவந்திட் டுள்ளே
மிகச்செருகி யொருசிறிதே தோன்றியகண் ணிணையாலே வினையேன் றன்னைப்
பகைத்துமத வேள்பொரநீ பார்த்திருந்தும் விட்டனையே பாவி யென்று
நகைத்ததுவு மினைக்கிலையேவன்னெஞ்சேயென வெறுத்துச்சொல்வான்போன்றும்

148 இருங்காம வேதனையா லிதயத்தின் மேல்வைத்த விடக்கை யாலே
யருங்காத லுயிரனையா யயிர்போன தாகிலுமி யகலே லென்று
தருங்காத லுடனேதன் னெஞ்சத்தி லுறைவோனைத் தகைவான் போன்றுஞ்
சுருங்காத கொங்காமச் சரம்பொறுந்த தோலென்று தொடுவான் போன்றும்.

149 களைந்தணிந்த கமலவளை யங்களினூற் கலைமதிதன் கதிர்க ளாகும்
கிளைத்தெழுபா சங்களினாற் பிணித்திழுப்பான் போன்றயிர்த்துக் கெடுவா னோக்கண்
டிளைப்புறுமென் துயரிரட்டித் திருகைபுடைத் திக்கதறி யெழுந்து வீழ்ந்து
வளைத்திறுகத் தனைத்தழுவிக் கொண்டுகபிஞ் சலமுனிவன் வாய்விட் டார்ப்ப.

150 அடர்க்கின்ற திறலயிரா வதந்துயிலு மாபோல வரவி நத்துக்
கிடக்கின்ற பெரியோனைக் கிழான கொடும்பாவிக் கெடுவாள் நாணேன்
படைக்கண்கண் மிகவிருண்டு மதிமயங்கி யறிவழிந்து பாதா ளத்தே
விடசென்று வீழ்பவர்போ லெங்கேயோ தானறியேன் விம்ம வீழ்ந்தேன்.

151 அப்பொழுதென் செய்தேனு னென்சொல்லிப் புலம்பினே னறியே னென்று
மொப்பறமுன் செய்தகொடு வினையாலோ பாவிமனத் துறந்தி லேனோ
விப்படியென் துயருறுவா ளென்றயனென் றலையிலிட்ட வெழுத்தி னாலோ
வெப்படியோ வெனதாவி பிறந்ததிலே யிறந்திலே யென்னை யாலும்.

152 அறியேனு னப்போது நெடுநேரஞ் சென்றதற்பி னயர்வு நீங்கிச்
சிறிதேயோ ருணர்வுண்டாய்த் தீயிலிட்ட புழுப்போலத் திண்பார் மீதே
வறிதேயப் பாவியுடல் பதைக்கின்ற வாறகண்டேன் கண்ட போதே
யிறவாதே யிருந்தேனே யெனக்கருதி யெகோனை யெழுந்து நோக்கி.

153 பாவியேன் பாவியேன் புண்டரிக முனியேயபா தகமே செய்தாய்
மேவியே வாழவெண்ணி நான்வரவு மவமதித்து விட்டுப் போனாய்
தாவியே நீவெறுக்கத் தாழ்வேது செய்தேனுன் றாழ்வுண் டேனு
மாவியே யனையானே யறக்கொடுமை செய்வார்களோ வறஞ்செய் வாரே.

154 கிளர்ந்தபகற் கடல்கடந்த வருத்தமெலாந் தாளிகையைக் கேட்டுப் பாருந்
தளர்ந்தமொழிக் கபிஞ்சலனைக் கண்டதற்பிற் சிறிதங்குத் தரித்தே னில்லை
விளைந்தவிடர்க் கிடைவேனை முறிப்பித்த பாவிகளார் வீணே நானின்
றுளைந்ததனித் துயர்பாரீர் முனிவரரீ ரொருவார்த்தை யருளிச் செய்மீர்.

155 அடுத்தவனைக் கைவிடுத்த லழகோதா னென்னுடைய வாசை பாரீர்
கடுத்துமதன் பரிபவித்த படிபாரீர் நொந்தேனுன் காணும் பாவி
யிடுக்கணறி வாரில்லை யென்னென்பா ரீங்கில்லை யெனக்கு நீரே
தொடுத்ததுணை யென்றிருந்தே னிப்படியே செய்தீரே தோன்ற லீரே.

156 அறக்கொடிய பிழைகாரி யென்பதுநீ ரறியாம லடியேன் மீது
சிறப்புடைய பெருநேயம் வைத்தீர்நா னிப்படிக்குத் தீங்கு செய்தே
னிறப்பதுவுஞ் செய்திலே னிருக்கின்றே னிதுசண்டு மென்னே யென்னே
மறக்குடியோ நங்குடியும் வாழ்ந்ததே காந்தருவர் மரபு தானே.

157 அப்பொழுதே யென்னருகே யிருந்துவிடா தவமதிசெய் தகன்று போய்விட்
டிப்பொழுதோ விவைமொழிவா யென்றேயொன் றியம்பாம லிருக்கின் றீர்நீ
ரப்பொழுது மும்மானை யன்னைசிறைப் பட்டகன்றே னல்லா தேகே
னிப்பொழுதென் றனிபாரீ ரிடர்பாரீ ரினியிரங்கீ ரிறைவ னீரே.

158 இனியெனக்கோர்புகலில்லையினியெனக்கோர்துணையில்லையென்னென்றுற்ற
வினியெனக்கோர் தந்தைதா யென்பவரு மில்லையினி யெல்லா நீரே
யினியெனக்கு முன்பளித்த கருணையினைத் தோற்றுவீ ரிங்கே வாவென்
றினியணைத்தெ னிடர்களைவீ ரிருடிகளு முனிவர்களோ வெம்பி ரானே.

159 இந்தவனத் தெய்வதைகா ளிறைஞ்சினே னெங்கோவை யெழுப்பித் தாரீ
ரந்தமிலாய் கயிலாயா வாருமற்றேற் கருள்புரியா யவனி மாதே
வெந்துயர்கண் டிவ்வுயிரை மீட்டருளாய் வாட்டமில்லா விதியே நீதான்
சிந்தைமகிழ்ந் தினியிரங்காய் தெய்வங்கா ளுனேதான் றியங்கு வேனே.

160 என்றினனே புலம்பியசொல் லேதென்று நினைப்பேனு னில்லை யுண்டோ
கன்றியபே யேறினர்போற் கதறியே மிகச்சொரிந்த கண்ணி னீருந்
துன்றியசோ கமும்விரித்த தலையுமலைந் தறத்துவண்ட துகிலு மெய்மே
லொன்றியிரா தற்றுதிர்பூ ணும்புழுதி புடைத்தேறு முடம்பு மாகி.

161 [illegible]வாம லவனுடலோ டொன்றுவபோன் மெய்யிறுகத் தழுவிக் கொண்டே
யாவு[illegible]ன் றரற்றியுழுந் தாரத்தை நோக்கியவ ளுவி தன்னைக்
கீர்வாய்[illegible]டுத்தனையே பாவிநீ யெனவெறுத்துங் கண்ணீர்த் தாரை
யோவாத[illegible]ணையைப் பலகாலுந் தழுவிக்கொண் டிரக்கூப் பிட்டு.

[illegible]பாது ப[illegible]லும் பலகாலுங் கபிஞ்சலன்றன் றாளில் வீழ்ந்தும்
[illegible]யோ[illegible]னுயிரைப் பிழைப்பியா யெனவழுதும் பிறங்கு சோகத்
[illegible]பாலே[illegible]தொழிந்தே னென்பளவி லவளந்த விறந்த காலத்
[illegible]ன [illegible]துயரத் தன்மையடைந் தறமோகித் தயர்ந்து வீழ்ந்தார்.